மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***10274—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நிலத்தைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் தேர்வு செய்யப்பட்டபின், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் 1–11–1996 அன்று தலைவர் கலைஞர் ஆட்சியில் நீலாங்கரையில் சார்–பதிவாளர் அலுவலகம், தனியாக முதல் தளத்தில் 1,300 சதுர அடி கொண்ட அலுவலகமாகத் துவங்கப்பட்டது. இந்த அலுவலகம், போதிய இட வசதியில்லாமல் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் நாளொன்றுக்கு*

2023 மார்ச் 24]

50-க்கும் மேற்பட்ட பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன. இந்த அலுவலகம், ஆண்டொன்றுக்கு ரூ.550 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் ஈட்டுகின்ற அலுவலகமாக உள்ளது. இதுநாள்வரையில், இவ்வலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், அங்கு வருகின்ற பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் தற்போது 100 ஆண்டுகளுக்கு மேலான 150 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக, கேட்டதைக் கொடுக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதற்கட்டமாக 2021 ஆம் ஆண்டு 29 அலுவலகங்களுக்கும், 2022 ஆம் ஆண்டு 50 அலுவலகங்களுக்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதியளித்து, அந்தப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்குத் தேவையான சுமார் 5,000 சதுர அடி இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், புதிய கட்டடம் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கூட்டுறவுக் கடன் சங்க அலுவலகம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையர் அலுவலகம் போன்ற அரசு சார்ந்த அனைத்து அலுவலகங்களும் மையப் பகுதியான சோழிங்கநல்லூரில் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியிலிருக்கின்ற அரசுக்குச் சொந்தமான மேய்க்கால் இடத்தில் ஓர் ஒருங்கிணைந்த*

அரசு வளாகத்தை உருவாக்கி, அந்த இடத்திலேயே சார் பதிவாளர் அலுவலகத்தையும் அமைத்து, பொதுமக்களுடைய நீண்டநாள் எதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சோழிங்கநல்லூர் தொகுதியில் மிகவும் அதிகப்படியான வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றன என்பதற்குச் சான்றாக அந்த ஒருங்கிணைந்த அரசு வளாகத்திற்குள்ளேயே சார் பதிவாளர் அலுவலகத்தையும் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, துப்புரவு மேற்பார்வையாளர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, துப்புரவு மேற்பார்வையாளர் இறந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திரு. ப. தனபால் அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. தி. வேல்முருகன் அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சி